ஏறாவூர் நகரசபை-2013

-----------------------------------

1. நிதிக்கூற்றுகள்

-----------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 ஏப்ரல் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

-----------------------------------------------------------------------------------------------------------

உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.36,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பொது நூலகத்தின் 1400 புத்தகங்கள் 2010ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் முற்றாக அழிக்கப்பட்டிருந்தும் அவை ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படாமல் உள்ளதினால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3. பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள பெண் சந்தை கடை வாடகைப் பணமாகிய ரூபா.150,510 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தையின் 40 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூபா.2,897,460 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கசாப்புக் கடைகளுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களை முழுமையாக குறித்த வருடத்தில் செலுத்தி முடிக்காத மூன்று நபர்களுக்கு தொடர்ச்சியாக 05 வருடங்கள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை காரணமாக 2010 தொடக்கம் 2013 வரையான ஆண்டுகளில் அறவிட வேண்டிய நிலுவையாக உள்ள ரூபா.344,429 தொகையான குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு படமாளிகையிலிருந்து 2010ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய கேளிக்கை வரி நிலுவை ரூபா.204,945 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைக் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.181,871 கடன் மீதியை மரண பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2014 ஆகஸ்ட் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா.3,446,050 தொகையான முற்பணங்களை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பத்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.4. கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டிடம் | 85,177,866 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 3,348,826 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 2,342,888 | |
| தளபாடம் பொருத்துகள் | 2,167,358 | |
| கணனி | 157,050 | |

1.3.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) | |
| (i) பிரிவு 40 | மாட்டிறைச்சி மடுவங்களை திருத்தம் செய்வதற்காக கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாது ரூபா. 564,512 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 177(2) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2014 யூலை 31ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 180(1) | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் சபையின் தவிசாளரால் விரிவான வருடாந்த நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அறிக்கை மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) பிரிவு 227(1) நகர சபையின் உறுப்பினார்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சபை தொடர்பான ஒப்பந்த வேலைகளில் ஈடுபடலாகாது. இதற்கு முரணாக சபை உறுப்பினர் ஒருவர் பொது முகாமையாளராக கடமையாற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு கொள்களத் திருத்த வேலைகள் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,881,587 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,396,642 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.484,945 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------------------

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

------------------------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 2,570,312 | 1,938,592 | 631,720 | 25 |
| குத்தகை | 1,436,420 | 1,247,340 | 189,080 | 13.2 |
| வாடகை | 1,366,200 | 625,300 | 740,900 | 54 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 788,500 | 655,700 | 132,800 | 17 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா.8,918,457 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பிரதி தவிசாளர் வாசஸ்தலத்துக்கான தொலைபேசிக் கட்டனம் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த கட்டணத் தொகையான ரூபா.3,000வை விஞ்சி செலுத்தப்பட்டிருந்த போதிலும், மிகையாக செலுத்தப்பட்ட ரூபா 8இ307 தொகையை அறவிட சபையால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012

ஆம் ஆண்டில் மிகையாக செலுத்தப்பட்ட ரூபா.12,466 தொகையை அறவிடுவதற்கு 2 வருடங்கள் கழித்தும் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(M) சபையினால் உள்;ராட்சி மன்றங்களின் ஒய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு 1995 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாததால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா.2,777,757 பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டி உள்ளது.

(இ) 1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாகுவதற்கு முன்பு பட்டினாட்சி மன்றமாக செயற்பட்ட காலத்தில் இலங்கை மின்சார சபை சார்பாக மின்சாரம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

1988 ஆம் ஆண்டிலிருந்து இவ்வறிக்கைத் திகதி வரை மின்சாரம் வழங்கிய வகையால் பாவனையாளரிடமிருந்து ரூபா.786,122 மின்சாரக் கட்டணத்தை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 53% தொடக்கம் 75% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) வருமான முகாமைத்துவம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு